**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.3/2017**

2026=ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ம் நாள் வியாழக்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

D.W.2 கோவிந்தராஜ், வயது 78, த/பெ துரைசாமி

**குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கில் உள்ள 5ம் பிரதிவாதி என் சகோதரர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ரவி என்பவர் ஜெயராமன் என்பவரின் முதல் மனைவியின் மகன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கெஜலட்சுமி என்பவர் ஜெயராமன் என்பவரின் 2ம் மனைவி என்றால் சரிதான். பிரதிவாதிகள் 1 முதல் 3 வரையானவர்கள் என் உறவினர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி கெஜலட்சுமி எனக்கு முன்பாக பி.வா.சா.1 ஆக சாட்சியம் அளித்தார் என்றால் சரிதான்.

2. இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரை மற்றும் ஆவணங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமான அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கை தேவேந்திரன் மகன்கள் சரவணன், செல்வகுமார் ஆகியோர் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் வாதி என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பொய்யான பட்டா பெற்று சொத்து என்னுடையது என்று உரிமை கோருகிறார்.

3. வழக்கு சொத்து ஆரணி வட்டம், வித்துவாந்தாங்கல் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் கிராம நத்த சர்வே எண். 32/8 என்றால் சரிதான். வழக்கு சொத்தின் தெற்கு பக்கம் பொது சந்து உள்ளது என்றால் சரிதான், கி x மே 90 அடி நீளம் கொண்டது. பொது சந்திற்கு தெற்கில் என் வீடு உள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு மேற்கில் வ x தெ பஜனை கோயில் தெரு உள்ளது என்றால் சரிதான்.

**வாதி வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
Arni